**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.
Calendar )
Preliminary Register) SC.218/2023
Sessions)

( Prosecution P.W.6
Deposition of witness for (Defence
(Court

| Name | மோகன்ராஜ் | -- | |
|---|---|---|---|
| Father's Name | அச்சைய நாயக்கர் | Calling | சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| Village | கோபாலபுரம் | Religion | இந்து |
| Taluk | ராஜபாளையம் | Age | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 30th day of June 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது விருதுநகர் மாவட்ட காவல் கட்டுபாட்டு அறையில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு ராஜபாளையம் வடக்கு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக நான் பணிபுரிந்தபோது 2023ம் ஆண்டு 24ம் தேதி (மாதம் நினைவில்லை) மாலை சுமார் 7 மணியளவில் ராஜபாளையம் காந்தி சிலையிலிருந்து பேருந்து நிலையம் செல்லும் ரோட்டில் ஆனந்தா லாட்ஜ் அருகில் சுமார் 20 நபர்கள் போக்குவரத்திற்கு இடையூறாக மறியல் செய்துக்கொண்டிருந்ததாக போக்குவரத்து பிரிவு போலீசார் ராஜபாளையம் வடக்கு காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்ததன் பெயரில் வடக்கு காவல் நிலைய காவலர் மூவேந்தன், தலைமை காவலர் மணிராஜ், முதல் நிலை காவலர் செல்லபாண்டியன் மற்றும் சில போலீசார்களுடன் நானும் மேற்படி பகுதிக்கு சென்று பார்த்தோம். நாங்கள் பார்த்தபோது சுமார் 50 நபர்கள் ரோட்டை மறித்து உட்காரந்துக்கொண்டு கோசம் போட்டுக்கொண்டிருந்தார்கள். குருவிக்கார இனத்தை குறவர் சமூகத்துடன் மத்திய அரசு சேர்த்து விட்டதாக கூறி அதை கண்டித்து அவர்கள் மறியல் செய்துக்கொண்டிருந்தார்கள். மேலும் நாங்கள் விசாரித்தபோது அவர்கள் நான்கு நாட்களாக மலையடிப்பட்டியில் மேற்படி சம்பவத்தை கண்டித்து உண்ணாவிரதம் இருந்து வந்ததாக தெரியவந்தது. அவர்கள் வனவேங்கை கட்சியை சேர்ந்தவர்கள் ஆவார்கள். மேற்படி மறியல் செய்துக்கொண்டிருந்தவர்கள் வனவேங்கை கட்சியை சார்ந்தவர்களும் குறவர் இனத்தை சேர்ந்தவர்களும் ஆவார்கள். மேலும் நான் தமிழர் கட்சியை சேர்நதவர்கள் சிலரும் இருந்தார்கள். மறியலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்களை பற்றி விசாரித்தபோது அதற்கு தலைமை தாங்கியவர் காளிராஜ் என்றும் மற்றும் சஞ்சய் மற்றும் பலர் என்றும் தெரியவந்தது. அவர்களது

பெயர் எனக்கு தற்போது சரியாக எனக்கு நினைவில்லை. நாங்கள் அவர்களிடம்

மறியலை கைவிட்டுவிட்டு எழுந்து செல்லுங்கள் என்று கூறினோம். அதற்கு அவர்கள் மறுத்துவிட்டார்கள். நாங்கள் வலுகட்டயமாக அவர்கள் கைகளை பிடித்து எழுப்பினோம். அப்போது அவர்கள் எங்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்கவில்லை. அதன் பின்னர் சிறிது பலபிரயோகத்தின் பேரில் அவர்களை அப்புறப்படுத்தினோம். அப்போது அதில் 15 நபர்கள் அங்கிருந்த கற்களை எடுத்து எங்களை நோக்கி எரிந்தார்கள். அப்போது அவர்கள் போலஸ்கார தேவடியாக மக்களா அரசாங்கத்தை எதிர்த்து நாங்கள் போராட்டம் செய்கிறோம். நீங்கள் என்னடா எங்களை வந்து தூக்குவது என்று சொல்லிக்கொண்டு கற்களை எரிந்தார்கள். அவர்கள் கற்களை எரிந்ததில் நாங்கள் அங்கிருந்து சென்று தப்பித்தோம். அப்போது எங்களுடன் இருந்த மணிராஜ் மற்றும் செல்லபாண்டியன் ஆகியோருக்கு கற்கள்பட்டு மணிராஜ் என்பவருக்கு இடது தோள்பட்டையில் பட்டு ரத்தம் வந்தது. செல்லபாண்டியன் என்பவருக்கு வலது தலை மற்றும் காது பக்கத்தில் கற்கள்பட்டு ரத்தம் வந்தது. அப்போது அங்கிருந்த ஏ ஆர் போலீஸ் ஒருத்தர் அவ்வழியாக வந்த ஆட்டோ ஒன்றில் காயப்பட்ட மணிராஜ் மற்றும் செல்லபாண்டியன் ஆகியோர்களை ஏற்றிக்கொண்டு ராஜபாளையம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். அதன் பின்னர்மறியலில் ஈடுபட்டிருந்த சுமார் 15 நபர்களை பிடித்து காவல் நிலையத்தில் உட்கார வைத்துக்கொண்டோம். மறியலில் ஈடுபட்டவர்கள் ஆஜர் எதிரிகள்தான். இது சம்பந்தமாக காவலர் மணிராஜ் என்பவர் ராஜபாளையம் வடக்கு காவல்நிலையத்தில் கொடுத்த புகாரின்பேரில் அவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

மலையடிப்பட்டியில் நடந்த உண்ணாவிரதத்தில் சுமார் 150 நபர்கள் கலந்துக்கொண்டிருப்பார்கள். சம்பவம் சமயத்தில் மலையடிப்பட்டியிலும் உண்ணாவிரதம் நடந்துக்கொண்டிருந்தது. அந்த உண்ணாவிரதத்திற்கு எங்கள் காவல் நிலையத்திலிருந்து தினமும் ஒரு போலீசார் சுழற்சி முறையில் பணியிலிருந்தார். சுமார் 15 நாடகள் அந்த உண்ணாவிரதம் தொடர்ச்சியாக நடந்து வந்தது. அவ்வாறு மலையடிப்பட்டியில் உண்ணாவிரதம் நபர்கள் பற்றிய விவரம் போலீசாருக்கு தெரியவந்தது. அந்த பகுதியில் அவர்களை கலைந்து செல்ல வழியுறுத்தியபோதுதான் தள்ளுமுள்ளு ஏற்பட்டு அதன் காரணமாக மணிராஜ் மற்றும் செல்லபாண்டி ஆகியோருக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல அந்த பகுதியில் எந்தவித போராட்டமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. போராட்டம் நடந்தற்கான புகைப்படமோ காணொளியோ தாக்கல் செய்யவில்லை. போராட்டம் நடந்த இடத்திற்கு மேற்படி நபர்கள் எவ்வாறு வந்தார்கள் என்றால் போராட்டம் செய்தவர்களின் வீடுகள் ராஜபாளையம் நகருக்குள்தான்

இருக்கின்றன.  நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல எதிரிகள் அசிங்கமாக பேசி காயம் ஏற்படுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 30th day of June 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**